தலைப்பு 289 – ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 289 - ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக் கூடும். எனது அறிக்கை 289 - ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினதும் பாராளுமன்றத்தின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் ˙சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டில் நிதி அல்லாத சொத்துக்கள் ஆரம்ப ரீதியான ரூபா 1,448,474,902 தொகை நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் ஏசிஏ - 6) ஆரம்ப மீதியின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அம்மீதி ரூபா 810,416,523 என காண்பித்து எஞ்சிய பெறுமதியான ரூபா 638,058,379 தொகை ஆரம்ப மீதிக்கு சேர்த்தல்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன	CIGAS இல் காணப்படும் வகையாக இருந்ததுடன் அது எங்களுக்கு மாற்ற முடியாதுள்ளதாக.	முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் இறுதி மீதிகள் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளாக எடுக்கப்பட வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் மூலதன செலவினம் ரூபா 470,236,029 ஆல் ஆண்டின் மூலதனமாக்குதல் ரூபா 11,225,741 அதாவது மொத்த மூலதன செலவில் 2 சதவீதமாக இருந்தது தெரிவு பரிசோதனையின் பிரகாரம் மூலதன செலவினமாக செலவிடப்பட்ட ரூபா 10,863,751 ஆன மொத்த பெறுமதி மூலதனம் ஆக்கப்பட்டிருக்கவில்லை.	சொத்துக்களை தற்போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக	மூலதனமாக்கப்பட வேண்டிய அனைத்து மூலதன செலவினங்களையும் மூலதன மாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iii) நிறுவனத்திடம் உள்ள அனைத்து காணிகளும் நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் (ஏசிஏ – 6) முறையான மதிப்பீட்டு பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 155,000,000 பெறுமதியான தல்பிடிய உப ஆராய்ச்சி நிலையத்திற்குரிய காணி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	உரிய நிலையான சொத்துக்கள் சிகாஸ் நிகழ்ச்சிக்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக	உரிய சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டு எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும்

(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செலலாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மாத்தளை மாவட்ட அலுவலகம் மற்றும் மாத்தளை மத்திய நாற்று மேடை தாவரங்கள் பதிவேடும் மாத்தளை மாவட்ட அலுவலகத்தின் விளைச்சல் பதிவேடும் நாளவரையாக பேணி செல்லப்பட்டு இருக்கவில்லை.	ஆவணங்களை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	ஆவணங்களை நாளது வரையாக பேணி செல்லாத உத்தியோ கத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் ஆவணங்களை நாளது வரையாக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த மீளாய்வாண்டின் 1.6.1. (ஆ) பந்தியின் அவதானிப்புக்குரிய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) திணைக்களத்தின் மீளாய்வாண்டின் 8 செலவின விடயங்களுக்காக மொத்த நிதி ஏற்பாடு தொகையில் ரூபா 102,000,000 ஆன நிதி ஏற்பாட்டில் ரூபா 16,603,635 தொகை குறைப் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த துடன் அந்நிதி ஏற்பாடு சேமிப்பு மொத்த தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 91 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன.	எதிர்பார்த்த பிரகாரம் செலவினம் இடம்பெறாமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக.	சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாட்டை ஆக்க பூர்வமாக திட்டமிடப்பட்டு முழுமையாக

			பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 செலவினங்களை் தவறாக கணக்கீடு செய்தல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் தபால் மற்றும் தொடர்பாடல் செலவின விடயமான 289-2-1-0-1402 கீழ் வருடாந்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 6,000,000 இருந்ததுடன் குறித்த செலவினத்தின் வருடாந்த தேறிய நிதி ஏற்பாட்டு எல்லையை மிகைப்பதை தவிர்ப்பதற்காக தவறாக ரூபா 449,216 ஆன செலவினம் 289-2-1-0-1409 செலவின விடயத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டில் தொலைபேசி மற்றும் செலவினம் அசாதாரணமாக அதிகரித்ததால் இந்நிதி ஏற்பாடு போதியதாக இருக்கவில்லை என்பதாக	முறையாக நிதி ஏற்பாடு மாற்றப்படாமல் அல்லது மேலதிக நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளாமல் தவறாக கணக்கு வைத்தமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

	அவதானிப்பு				
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணக்கமின்மை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு	289,964,900	அமைச்சரால் கட்டளை வழங்கப்பட்டதன் பின்னர் விவசாய பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் உற்பத்தி செய்யும் நபர் ஒருவருக்கு மானியம் மற்றும் நிதிசார் அல்லது வேறு உதவிகள் வழங்கும் முன்மொழிவு ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அமைச்சரால் கட்டளை இடாமல் மீளாய்வாண்டில் ஏற்றுமதி அபிவிருத்தி மானியங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.	திணைக்களத்தின் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை செயற் படுத்துவதற்கு முன்னர் வரிசை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு அங்கீகாரத்தின் பின்னர் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப் என்பதாக.	படுவதாக சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு அதற்கு புறம்பாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

(ஆ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை				
(i)	நிதிப் பிரமாணம் 169	107, 362 முதல் 397, 260 வரை	வெளி வழங்குனர்களால் வழங்கப்படும் உற்பத்திகள் வாசனை திரவிய விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்பட்ட தொகையில் 75 சதவீதத்தை வைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் குறித்த வழங்குவதற்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றது. எனினும் அப் பணத்தை கொடுக்க வேண்டிய வழங்குனர் யார் என்பது இனங் காணக்கூடிய பதிவேடு ஒன்று பராமரிக்கப் படாததால் 16 சந்தர்ப்பங்களில் குறித்த பண மீதிகள் உத்தியோகத்தரின் கையில் வைத்திருக்கப்பட்டிருந்தது.	பணக் கொடுப்பனவு தொடர்பாக நடவடிக்கைகள் கணனி தரவுமுறையில் உள்ளடக்குவதற்கு முன்னர் கணக்கீடு செய்யும் போது ஏற்பட்ட நடைமுறை சிக்கல் காரணமாக தாமதங்கள் இடம் பெற்றதாகவும் தற்போது வழங்குனர்களின் பணம் மாதாந்தம் கணக்கீடு செய்யப்படுவதாக.	நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறைப்படி ஆவணங்களை பராமரிக்காத மற்றும் பணத்தை வைத்துக் கொண்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	நிதிப் பிரமாணம் 785(iii)ஆ	117,112	திருத்த வேலை தன்மை அடிப்படையில் தேவையான உதிரி பாகங்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு முகவர் நிறுவனத்தின் மூலம் அல்லது விலை கோரல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டிருந்தன.	பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை.	பெறுகை வழிகாட்டல் கோவை பின்பற்றப்படாமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு முறைப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் நிதி பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உள்ளக வேலை திட்டத்தை பலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2018 திசெம்பர் 31 ஆந் திகதிய 05/2021 ஆம் இலக்க கொம்ட்ரோலர்		நிதி அல்லாத சொத்துக்கள் ஒவ்வொரு 05 ஆண்டுக்கு ஒருமுறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை	கணக்காய்வு விசாரணை சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் எதிர்காலத்தில் நிதி அல்லாத	ஒவ்வொரு 05 ஆண்டுக்கு ஒரு முறையும் சொத்துக்கள் மதிப்பீடு செய்வதற்கு

ஜெனரால் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் மதிப்பீட்டு வழிகாட்டி கோவையின் 1.1.1, 2.3	எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சொத்துக்கள் மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	தேவையான உள்ளக வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்

3.4 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்வுசெய்தல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அரசாங்க உத்தியோகத்தர்களி முற்பண பி கணக்கில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து முல்தல் 5 வரையான காலப்பகுதியி போது அறவிடப்பட வேண்டிய ரூ 451,079 கூட்டுப்பெறுமதியான கட மீதியும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கிமிருந்து 1 முதல் வரையான ஆண் காலப்பகுதியில் இருந்து வரும் மொத்த ரூபா 720,136 ஆன கடன் நீதி ஒன் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வ அறவிடப்பட்டிருக்கவில்லை.	ரூபா 907,874 ஆன கட மீதிகையள புத்தகத்தில் இருந் பதிவழிப்பதற்கு அங்கீகாரத்துக்கா அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுட ரூபா 263,341 ஆன கட மீதிகளை பிணையாளர்களிடமிருந் தவணையாக அறவிடுவதாக.	அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை முறைப் படி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவற்றை அறவிடு வதற்கு காலரீதியாக நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2015 ஆம் ஆண்டின் பின்னர் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தர தயாரிக்கப்பட்டிருக்கவில்லை அதற்காக 2024 ஆம் ஆண்டு கணக்கு செயற் குழுவின் கட்டளையொன்று காணப்பட்ட போதும் 2025 மார்ச் 31 ஆம் திகதி வரை அது தொடர்பாக கவனம் செலுத்தி இருக்கவில்லை.	2025 – 2030 ஆண்டு வரை கூட்டிணைிந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற் காக விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக	அரசாங்க கணக்குகள் செயற்குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கூட்டிணைந்த இந்த திட்டம் ஒன்றை விரைவில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதாக.

(ஆ)	ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் அனைத்து அபிவிருத்தி நிகழ்த்தித்திட்டங்கள் அனைத்து மாவட்டங்களையும் மேவுகை செய்யும் வகையில் திட்டமிடப்பட வேண்டிய போதிலும் புத்தளம் மாவட்டத்தின் திட்ட விடப்பட்டிருந்த 6 நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை	திட்டமிடப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சிகளை செயற்படுத்தும் போது நடைமுறை சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேர்வதாக	திட்டமிடப்பட்ட அனைத்து நிகழ்ச்சி களையும் செயற்ப டுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகளை செயற்படுத்தப்படாமை தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

4.2 எதிர்பார்த்த விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

	கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	
(அ)	புத்தளம் மாவட்டத்தின் விவசாய பயிற்சித் திட்டங்களுக்குரிய 12 நிகழ்ச்சிகள் மற்றும் 180 பயனாளிகளுக்கும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் செயன் முன்னேற்றம் 04 பயிற்சித் திட்டங்களுக்கும் 50 பயனாளிகளுக்கும் மாத்திரமாக இருந்ததால் செயன் முன்னேற்றம் முறையே 33 சதவீதம் மற்றும் 28 சதவீதம் என்ற குறைந்த மட்டத்திலேயே இருந்தது.	விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் மற்றும் தேவைகளின் அடிப்படையில் இலக்குகள் திருத்தப்பட்டதாகவும் மேலும் புத்தளம் மாவட்டத்தில் செயல்படுத்த முடியாத திட்டங்களை குருநாகல் மாவட்டத்தில் செயற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக.	இலக்குகளை அடையத் தவறியது குறித்து முறையான விசாரணை நடத்துவதற்கும்டு, எதிர்காலத்தில் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	ஒவ்வொரு மாகாணத்திலும் மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட நாற்றுக்களுக்கு இலக்குகள் வழங்கப்பட்டிருந்ததுடன் விவசாயி களுக்குத் தெரிவு செய்யப்பட்டு, வெளிக்களத்தில் நடுவதற்காக செய்வதற்கு உரிய நாற்றுக்கள் வழங்கப்பட்டன. இருப்பினும், பௌதீக ஆய்வின் போது, நாற்றுக்களின் அழிவடைந் திருந்தமை, பராமரிப்பு இல்லாமல் காணப்பட்டமை மற்றும் அறுவடை வரை பின்தொடர்தல் இல்லாததால் நாற்றுக்கள் இலக்குகளில் 50% இற்கும் குறைவாகவே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	.பல்வேறு வானிலை, காலநிலை மற்றும் பூச்சி நோய்கள் காரணமாக தாவர நிறுவலின் சதவீதம் அதிகரிக்க அல்லது குறையக் கூடும். விவசாயிகளுக்காக செயற் படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் விவசாயிகளின் ஆர்வம் மற்றும் தேவை காரணமாக எதிர்காலத்தில் தாவர நிறுவலின் சதவீதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் என்பதாக.	- மேற்படி -

(இ)	திணைக்களத்தின் நாற்று மேடைகளின் உற்பத்தித் திறனைத் தீர்மானிக்கும் போது என்ன அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டன என்பது உறுதிப்படுத்தப்படவில்லை தற்போது பண்ணைகளில் அந்த நாற்றுமேடைகளில் காணப்படுகின்ற இயலளவுக்கும் தற்போதைய உற்பத்திக்கும் இடையே அதிகளவில் வேறுபாடு இருந்தது, இது 18 சதவீதத்திலிருந்து 64 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. அதன் பிரகாரம் வெளிக்களத்தில் நடக்கூடிய நாற்றுகளின் எண்ணிக்கை 1,181,742 ஆல் குறைந்து காணப்பட்டது.	தற்போதுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் தேவையான முழு எண்ணிக்கையிலான தொழிலாளர்களைப் பெற முடியும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் உற்பத்தி செய்யக் கூடிய இயலளவு நிர்ணயிக்கப்பட்ட காரணத்தினால் எதிர்பார்த்த விளைச்சளை அடைய முடியாதிருந்ததுடன் நாற்றுகள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக தேவையான வளங்களை எதிர்காலத்தில் அதிகரித்தால் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள முடியுமென்பதாக.	முறையான அளவுகோல்களின் அடிப்படையில் நாற்றுமேடைகளின் இயர் இயலளவைத் தீர்மானிப்பதும், நாற்றுமேடைகளின் உயர் இயலளவில் நாற்றுக்களை உற்பத்தி வெளிக்களத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	திணைக்களத்தின் பரிந்துரையின் பிரகாரம், ஒரு மிளகு கொடியிலிருந்து 01 கிலோகிராம் உலர்ந்த மிளகைப் பெற முடியுமாக இருந்ததுடன் அனைத்து தொழில்நுட்ப அறிவையும் பயன்படுத்தி பராமரிக்கப்படும் வல்பிட்ட இழைய வளர்ப்பு நிலையத்திற்குச் சொந்தமான மிளகு கொடிகளிலிருந்து பெறப்பட்ட விளைச்சல் பரிந்துரைக்கப்பட்ட இலக்கிலிருந்து 65 சதவீதம் குறைந்துள்ளது.	நாட்டில் இரசாயன உரங்கள் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டதால், உரப் பற்றாக்குறை மற்றும் மிளகு கொடிகளில் 90% ஆனவை 35 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை என்பதால், அறுவடை குறைந்துள்ளது. எதிர்காலத்தில் இந்த பழைய கொடிகளை அகற்றிவிட்டு புதியவற்றை நடுவதற் திட்டமிடப்பட்டுள்ளதாக	எதிர்வரும் ஆண்டுக்கான எதிர்பார்த்த இலக்குகளை அடைய வேலைதிட்டம் ஒன்றை தயாரித்து செயற்படுத்த வேண்டும்.
(இ)	ஏற்றுமதி விவசாய பயிர்களை விரிவுபடுத்துவதே திணைக்களத்தின் முதன்மையான மற்றும் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாக இருந்ததுடன். கடந்த 11 ஆண்டுகளில் இதற்காக ரூபா. 2507 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 பயிர் வகைகளில் கிடைக்கும் காணியின் பரப்பளவு 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 15,875 ஏக்கரால் அல்லது 21 சதவீதம் குறைந்துள்ளது.	சரியான ஒப்பீடு செய்வதற்கு 2012 ஆம் ஆண்டிற்கு பதிலாக 2014 ஐ அடிப்படை ஆண்டாகக் கருத வேண்டும். 2014 ஐ அடிப்படையாகக் கொண்டு தொடர்புடைய பயிர்களின் பரவலை ஒப்பிடும் போது, கடந்த 9 ஆண்டுகளில் அனைத்து பயிர் வகைகளின் விளைச்சலில் பரப்பிலும் எந்தக் குறைவும் ஏற்படவில்லை என்பதாக.	எதிர்பார்த்த நோக்கங்களை நிறை வேற்றத் தவறியது குறித்து புலனாய்வொன்று நடத்தப்பட்டு புதிய தந்திரோபாயத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு குறிக்கோள்களை அடைய ஒரு வேலைத் திட்டத்தை உருவாக்க வேண்டும்.
(ஊ)	2023 ஆம் ஆண்டின் போது கொக்கோ மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்தி பொருட்களின் இறக்குமதிக்காக ரூபா. 8,846 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த உற்பத்தி உள்நாட்டு நுகர்வுக்குத் தேவையான அளவில் இந்த	கொக்கோ இற்காக சர்வதேச சந்தையுடன் ஒப்பீடு செய்யும் போது உள்ளூர் உற்பத்தி குறைவாக உள்ளது மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் சர்வதேச விலைகளுடன் போட்டியிடும் திறன் குறைந்த மட்டத்தில் உள்ளது. மேலும்,	ஏற்றுமதி பயிர் வகைகளின் இறக்குமதியை குறைப்பதற்காக பொருத்தமான கொள்கை கட்டமைப்பு மற்றும் வேலைத் திட்டம் ஒன்றையும் தயாரித்து

	உற்பத்தியை உற்பத்தி செய்ய தவறிய காரணத்தால் இந் நாட்டில் ஏற்றுமதி பயிர் வகைகளின் இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட் செலவில் 82 சதவீதம் கொக்கோவிற்காக செலவிடப்பட்டிருந்தது. திணைக்களத்தினால் நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப கொக்கோ உற்பத்தியை மேம்படுத்து வதற்கும் ஒன்று சேர்ப்பதற்கும் பொருத்தமான வேலைத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தாத காரணத்தால் இந்த இறக்குமதி செலவு அதிகரித்திருந்தது.	விலங்குகளின் சேதம் காரணமாக கொக்கோ பயிர் அதிகளவில் சேதமடைவதன் காரணமாக விளைச்சளை ஊக்குவிப்பதில் சிக்கல்கள் உள்ளன. இதற்கு தீர்வாக தோட்டத் துறையுடன் இணைந்து இறப்பர் பயிர் விளைச்சலுடன் இணைந்து கொக்கோ விளைச்சளை இடைப் பயிராக ஊக்குவிக்க நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதாக.	செயல்படுத்தப்பட வேண்டும். .
(எ)	செயல்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் கீழ், 14 விரிவாக்க அலுவலர் பிரிவுகளின் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் இருந்தது.	ஒவ்வொரு பயிரின் அடிப்படையிலும் ஒட்டுமொத்த முன்னேற்றத்தைக் கணக்கிடுவது பொருத்தமானது அல்ல எனவும் ஒரு பயிரால் மேவுகை செய்யப்படாத இலக்கு அளவினை இன்னொரு பயிர் பகுதி ஒன்றினால் மேவுகை செய்யலாம் என்பதாக	செயற்திட்டங்களைத் தெரிவு செய்து செயல்படுத்துதல், மற்றும் மேற்பார்வையிட்ட உத்தியோகத்தர்கள் மீது முறையான ஆய்வு நடத்துவதற்கம், அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் முன்னேற்றத்தை அடைய ஒரு முறையான திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	
(அ)	முல்ஹல்கெலே தோட்டம் என்று அழைக்கப்படும் இந்த காணி 1980 முதல் எங்கள் திணைக்களத்தின் வசம் உள்ளது, ஆனால் அதைத் திதைணக்களத்திடமிருந்து கையேய்கும்ம் முறையான செயல்முறை இன்னும் நிறைவடையவில்லை. முல்ஹல்கெலே தாவர நாற்றுமேடை அமைந்துள்ள 05 ஏக்கர் 01 ரூட் காணி 1980 முதல் திணைக்களத்தின் வசம் உள்ளது, ஆனால் திணைக்களத்தால் காணி முறையாக கையேற்கப்படாததால், காணி சீர்திருத்த ஆணைக் குழுவால் 100 ஏக்கர் காணியில் 02 ஏக்கர் 2 ரூட் 5 பேர்ச் என்ற அளவில் 30 ஆண்டு காலப் பகுதிக்கு ஒரு தனியார்	இந்த முல்ஹல்கெலே தோட்டம் என்று அழைக்கப்படும் இந்த காணி 1980 முதல் எங்கள் திணைக்களத்தினால் உடமை கொள்ளப்பட்டு வந்த போதும் இதுவரை முறைப்படி திணைக்களத்திற்கு கையேற்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதாக.	பயன்படுத்தப்படும் காணியை முறையாக கையேற்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கியிருந்தது.		
(ஆ)	திணைக்களத்தால் பயன்படுத்தப்படும் 365 ஏக்கர் அளவிலான 30 காணித் துண்டுகள் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் உரித்தினை கையேற்கப்பட்டு இருக்கவில்லை.	இந்தத் திணைக்களத்தினால் கையேற்கப்பட்டு வந்த வந்த 30 காணித் துண்டுகளில், 03 காணித் துண்டுகளை கையேற்கும் பணி நிறைவடைந்துள்ளதுடன் 27 காணித் துண்டுகளுக்கான கையேற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றதாக.	காணிகளின் உரித்தினை கையேற்க உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	திணைக்களத்தால் பயன்படுத்தப்படும் ஏனைய அமைச்சிற்குச் சொந்தமான 25 வாகனங்களை கையேற்கும் பணி மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	ஏனைய அமைச்சுகளுக்குச் சொந்தமான வாகனங்களிலிருந்து 11 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 01 கெப் ஆகியவை தற்போது திணைக்களத்தின் பெயரில் கையேற்கப்பட்டுள்ளதாக.	வாகனங்களை உடனடியாக கையேற்கப்பட வேண்டும் அல்லது முறையான முறையில் தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.
(ஈ)	ரூபா 244,375 பெறுமதியான வல்பிட இழைய வளர்ப்பு நிலையத்தின் நீர் விசிரல் முறைமை 3 ஆண்டு காலமாக விளைவற்று இருந்தது. .	பயிர்ச்செய்கை கிணறுகளில் இருந்து வரும் நீர் மிகவும் சேறும் சகதியுமாக இருந்தது, மேலும் நீர்ப்பாசன நீர் விநியோக முறைமையில் நெருடல் காரணமாக முறைமை பயனற்றதாக மாறியது. சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு பல சந்தர்ப்பங்களில் தகவல் தெரிவிக்கப்பட்டதுடன் ஆனால் அதற்காக எடுக்கப்பட்ட தீர்வுகள் தொடர்புடைய சிக்கலை தீர்க்க முடியவில்லை என்பதாக.	சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(உ)	நாரம்மல இடைப்பயிர் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தின் செயற்பணியில் தென்னைய் செய்கையின் கீழ் ஏற்றுமதி விவசாய பயிர்களை பயிரிடுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்வதை உள்ளடக்கியிருந்தாலும், காணியில் உள்ள பெரும்பாலான தென்னை மரங்கள் 50 முதல் 84 வயதுடைய பழைய தென்னை மரங்களாக இருந்ததால், நிறுவனத்தின் செயல்பாடுகள் அதன் செயற்பணிக்கு ஏற்ப வடிவமைக்கப்படவில்லை.	முதிர்ந்த தென்னை மரங்களுககு இடையில் 500 தென்னை நாற்றுகளை வளர்க்கும் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பழைய தென்னை செய்கையை அகற்ற தேலையாக இருப்பதால், அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக.	நிலத்தை உயர் உற்பத்தித்திறனுடன் பயன்படுத்தி, இந்த செயற்பணியை நிறைவேற்றுவதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

(ஊ)	ரூபா 3,000,000 மொத்த மதிப்பீட்டு பெறுமதியான 03 வாகனங்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.	விவசாய அமைச்சின் செயலாளரால் அப்புறப்படுத்தப் பட்டு, ஏனைய அரச நிறுவனங்களுக்கு மாற்றுவதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு இணங்க, அந்த வாகனங்கள் எதிர்காலத்தில் தொழில்நுட்பக் கல்லூரிகளின் மாணவர்களின் செய்முறை படிப்புக்காக வழங்கப்படும்.	சொத்துக்களை குறைவாகப் பயன்படுத்தும் நிலைமையை தவிர்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முறையாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் வேண்டும்.
(எ)	ரூபா 4,850,000 மொத்த மதிப்பீட்டு பெறுமதியான 05 வாகனங்கள் 2-4 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமலும் குறைப்பயன்பாட்டிற்கும் உட்பட்டு தலைமை அலுவலகம் மற்றும் மாத்தளை மாவட்ட அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.	பதில் எதுவும் வழங்கப்படவில்லை.	- மேற்படி -
(ஊ)	திணைக்களத்திற்குச் சொந்தமான 98 வாகனங்கள் இருந்த போதிலும், 48 ஓட்டுநர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதால், தொடர்புடைய வாகனங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது.	அங்கீகரிக்கப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 61 ஆக இருந்ததுடன், சேவையில் ஈடுபடுத்தப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 47 ஆகவும் உள்ளது. சாரதி பதவிக்கான 14 வெற்றிடங்கள் குறித்து பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் சாரதி இணைப்பில் தரவுகள் உள்ளிடப்பட்டுள்ளதாக.	ஒரு முறையான பகுப்பாய்வு செய்யப்பட்டு, மிகையான வாகனங்களை அப்புறப்படுத்த அல்லது இருக்கும் வாகனங்களை உயர் அளவில் பயன்படுத்த ஒரு வேலைத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.
(ஐ)	.மாத்தளை மத்திய நாற்று மேடைக்காக 2021 ஆம் ஆண்டு ரூபா. 111,600 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 5000 லிட்டர் அளவிலான 02 நீர் தொட்டிகள் 02 ஆண்டுகளுக்கும் மேலாக நோக்கம் கொண்ட செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்படுன்றன.	பதில் எதுவும் வழங்கப்படவில்லை.	எதிர்பார்த்த நோக்கத்திற்காக அவற்றைப் பயன்படுத்த அல்லது வேறு தேவைகள் உள்ள ஒரு நிறுவனத்திடம் கையளிக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஒ)	திணைக்களத்திற்குச் சொந்தமான நிலையங்கள், நாற்று பண்ணைகள் மற்றும் 09 உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்குச் சொந்தமான 15.28 ஏக்கர் காணி எந்தவொரு ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைக்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்று இருந்தது. .	இயற்கை நிலப்பரப்பு காரணமாக பயிர்ச்செய்கைக்கு ஏற்றதாக இல்லாத நிலங்களை சுற்றுச்சூழல் சமநிலைக்கு தீங்கு விளைவிக்காத வகையில் பராமரிக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. திணைக்களத்திற்கு கிடைக்கும் ஒதுக்கீட்டின் எல்லைக்குள்	திணைக்களத்திக்குச் சொந்தமான வெற்றிடமாக உள்ள காணிகளை செயற்திறனாக பயன்படுத்த ஒரு திட்டத்தை தயாரித்து செயற்படுத்த வேண்டும்.

மீதமுள்ள காணியை அதிகபட்ச உற்பத்தித்திறனுடன் பயன்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உதவி பணிப்பாளர்கள் / பிரதிப் பணிப்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக.

4.4 நட்டங்களும் சேதங்களும்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	
(அ)	நி.பி பிரமாணம் 104(1) இன் அரசிற்கு ஏற்பட்ட நட்டங்கள் மற்றம் இழப்புகள் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டங்கள் மற்றம் இழப்புக்களை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், நட்டங்கள் மற்றம் இழப்புகள் கூற்றில் எஞ்சியுள்ள ரூபா. 3,037,216 இல் 1 முதல் 10 ஆண்டுகளுக்கு இடையில் நடந்த 14 சம்பவங்கள் தொடர்பாக ரூபா. 787,216 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.	ரூபா 166,850 பெறுமதியான தொகை புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது. 05 சம்பவங்கள் தொடர்பாக ரூபா 202,670 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், 2 சம்பவங்கள் தொடர்பாக விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள 06 சம்பவங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் பிரிவு 104(4) இன் கீழ் விசாரணைகள் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக	அறவிடுவதற்காக முறையான நடவடிக்கைகளை எடுக்காத உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்களை உடனடியாக அறவிடுவதற்கு எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	முல்ஹல்கெலே மத்திய நாற்று மேடையில் ரூபா.470,745 பொருட்கள் பற்றாக்குறை ஒன்று இருந்த போதிலும், அது தொடர்பில் பொறுப்பான உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்படட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	நி.பி பிரமாணம் 104(4) இன் கீழ் பரிசோதனை நடத்தப்பட்டு, தொடர்புடைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான விசாரணையில் எந்தவொரு நபராலும் மோசடி, அலட்சியம், விடுபடுதல், தாமதம் அல்லது ஏனைய தவறுகள் எதுவும் செய்யப்படவில்லை என்றும் குழு பரிந்துரைத்துள்ளதாக.	நட்டங்கள் சேதங்கள் பற்றி பொறுப்பான தரப்பினரை அடையாளம் கண்டு, நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களம் வாகனங்களுக்கான டயர் தேவையை குறிப்பாக அடையாளம் காணாமல், கடந்த ஆண்டு திசெம்பரில், ரூபா 2,416,265 பெறுமதியான 50 டயர்களை கொள்வனவு செய்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிக்குள் ரூ. 1,812,231 பெறுமதியான 35 டயர்கள் களஞ்சியத்தில் எஞ்சி இருந்தன.	மீளாய்வாண்டின் இறுதியில், 16 டயர்கள் மீயொன்ற இருந்ததுடன், மேலும் கராஜ்களில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் தொழில்நுட்பக் குறைபாடுகள் காரணமாக இயக்க முடியாததால் அந்த டயர்கள் பயன்பாட்டிற்கு விடப்படாமல் இருந்ததாக.	முறையான ஆய்வின் மூலம் தேவைகளை அடையாளம் காணாமல் கொள்வனவு செய்வதற்கு தொடங்கிய உத்தியோகத்தர்கள் மீது முறையான

			நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	திணைக்களத்தினால் ஏற்றுமதி பயிர்கள் விரிவாக்கத்தை ஊக்குவிப்பதற்காக பயிர்கள் குறித்த புத்தகங்களை அச்சிட்டு விநியோகிக்கும் செயல்முறை மேற்கொள்ளப்பட்டிருந்த துடன், அதனை களப் பயன்பாட்டிற்காக, 1996 முதல் 2022 வரை பல்வேறு நேரங்களில் அச்சிடப்பட்ட ரூபா 2,446,430 பெறுமதியான 45,540 புத்தகங்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னும் எஞ்சி உள்ளன.	தற்போது மீதமுள்ள தொழில்நுட்ப வெளியீடுகளின் அளவை பல்வேறு தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி, பங்குதாரர்கள் மற்றும் ஏற்றுமதி விவசாயம் என்ற விடயப் பகுதியில் ஆர்வமுள்ள அனைத்து தரப்பினருக்கும் சந்தைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரிவுகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் களுக்குத் தெரிவிக்கப்பட்டு உள்ளதாக.	செயற்திறனான பயனுள்ள வேலைத் திட்டமொன்றைப் பயன்படுத்துவதன் மூலம் சமூகத்தினரிடையே புத்தக விநியோகத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	2019 முதல் 2023 வரையிலான காலப் பகுதியில் திணைக்களத்தின் 12 நாற்று மேடைகளின் ஆகக் கூடிய உற்பத்தி இயலளவு மட்டம் 3,005,000 நாற்றுக்களாக இருந்ததுடன். அதிகபட்ச திறனில் உற்பத்தி செய்யப்பட்ட முறையான வேலைத் திட்டமொன்றின் கீழ் வெளிக் களமயப்படுத்தல் இல்லாமல் பெறப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகளின் அடிப்படையில், வழங்கப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை 1,514,813 ஆகும். அதன் பிரகாரம் நாற்றுக்களை உயர் இயலளவிற்கு ஒப்பாக வெளியிடப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கை 50 சதவீதம் அளவிலான குறைவாக இருந்தது.	திணைக்களத்தின் மத்திய நாற்று மேடைகளில் உயர் இயலளவு உற்பத்தித் திறனில் நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுவதில்லை. சம்பந்தப்பட்ட நாற்று மேடைகளில் பெறப்படும் நிதி ஒதுக்கீட்டின் அளவு, ஒவ்வொரு பயிருக்கும் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் கேள்வி மற்றும் சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் நிலவும் வானிலை மற்றும் காலநிலை நிலைமைகளின் தாக்கத்தை பொறுத்து மாறுபடும் என.	நாற்று மேடைகளில் உயர் இயலளவு உற்பத்தித் திறனில் நாற்றுகளை உற்பத்தி செய்த வெளிக்களத்திற்கு வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களில் நிறுவனத்திற்குரிய 05 நோக்கங்கள் அடையாளம் காணப்பட்ட போதிலும், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை அறவிடுவதற்கு திட்டவட்டமான திட்டங்கள் மற்றும் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டு செயறபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தின் நிலையான அபிவிருத்தி நோக்கங்களுக்கு பொருந்தும் வகையில் (வருடாந்த செயல் திட்டத்தின் மூலம்) திட்டவட்டமான அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி திட்டங்களைத் திணைக்களம் திட்டமிட்டு செயற்படுத்துகிறது. இதன் மூலம் திணைக்களத்தல் அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி நேர்க்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	திட்டவட்டமான அபிவிருத்தி மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டு செயற்படுத்துவதற்கு விரைவான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் இறுதி திகதி உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளவாறான பதவியணியனருடன் ஒப்பிடும் போது, 177 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் 10 பதவிகளில் மிகை காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளவாறான பதவியணி தற்போதைய கடமைகளுடன் மீளாய்வு செய்து திருத்தம் செய்வதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை .	தற்போதைய கடமைகளுடன் மீளாய்வு செய்து அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தம் செய்யப்பட வேண்டும்.
(ஆ)	காணப்படுகின்ற 20 சிரேஷ்ட நிலை வெற்றிடங்களும் இலங்கை விஞ்ஞான சேவையில் உள்ள பதவிகளாக இருந்ததுடன், இது திணைக்களத்தின் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் பாதகமாக தாக்களித்திருந்தன. இ	லங்கை விஞ்ஞான சேவையில் உள்ள பணிப்பாளர் (அபிவிருத்தி) மற்றும் பணிப்பாளர் (விசேட ஆராய்ச்சி) ஆகிய 02 பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கை விஞ்ஞான சேவையில் உள்ள பி.ப / உ.ப (ஆரா/அபி) பதவிகள் வெற்றிடங்கள் உள்ளதாகவும் ஆட்சேர்ப்பு மீளாய்வுக் குழுவிற்கு அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக.	திணைக்களம் சார்ந்த செயற்பாடுகளை தொடர்ச்சியாக உறுதி செய்வதற்காக, முறையான பகுப்பாய்வு நடத்தப்பட்டு, தேவையான பதவிகளில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	17 மாவட்ட / விடய விரிவாக்க அலுவலர் பதவிகள் மற்றும் 03 தலைமை தொழில்நுட்ப அலுவலர் பதவிகள் மற்றும் 43 விரிவாக்க அலுவலர் பதவிகளின் வெற்றிடங்கள் காணப்படுகின்றமை வெளிக்கள நடவடிக்கைகளின் சுமூகமான பேணிச் செல்வதில் பாதகமாக தாக்களித்திருந்தன.	2025.03.31 இல் உள்ளவாறு விரிவாக்க அலுவலர்களுக்கான 17 வெற்றிடங்கள் உள்ளன. 03 தலைமை தொழில்நுட்ப அலுவலர் பதவிகளும் வெற்றிடங்களாக உள்ளன. இந்த விசேட தரப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் செய்யப்படுகிறது, மேலும் இந்தத் தகுதிகளைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் எவரும் இல்லை. 38 விரிவாக்க அலுவலர் வெற்றிடங்கள் உள்ளதாக.	வெளிக்கள நடவடிக்கைகளின் சுமூகமான பேணிச் செல்வதற்கு தேவையான உயர் மட்ட பதவியணியனிருடன் பேணிச் செல்லல் வேண்டும்.